**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 28 May 2016

# தகவல் தொகுப்பு அறிவியல் கழகம்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் புதிய தகவல் தொகுப்பு அறிவியல் கழகம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அறிவுசார் நகரமாகும் சிங்கப்பூரின் முயற்சிகளுக்கு ஆய்வு வழியில் பங்களிக்கும் நோக்கத்தில் இந்தக் கழகம் தொடங்கப்பட்டுள்ளது. $12 மில்லியன் முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ள கழகம் கிட்டத்தட்ட 100 ஆய்வாளர்கள், ஊழியர்களைக் கொண்டிருக்கும். தகவல் தொகுப்பு அறிவியல் தொடர்பான ஆய்வுகளை இவர்கள் மேற்கொள்வர். ஐந்து ஆண்டு காலத்தில் 50 கல்வி உபகாரச் சம்பளங்களையும் கழகம் வழங்கவுள்ளது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.